27.01.2026

O.S.No.466/2012

பி.வா.சா.1.திரு.ஹரிஹரசுதன், த.பெ.திரு.கருப்பையா.

சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

**குறுக்கு விசாரணை**

1) வாதி என்ன காரணத்திற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்ற விவரம் எனக்கு தெரியும். வாதி தாக்கல் செய்துள்ள வழக்குரைக்கு எதிர்வழக்குரை நான் தாக்கல் செய்தேனா என்றால் வேறு அதிகாரி தாக்கல் செய்தார். எதிர்வழக்குரையில் என்ன குறிப்பிட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் அலுவலக கோப்பில் உள்ளது அதன் அடிப்படையில் எனக்கு தெரியும். நான் 2015 ம் ஆண்டுதான் பொதுப்பணித்துறையில் பணிக்கு சேர்ந்தேன் என்றால் ஆமாம். 2018ம் ஆண்டுதான் மேலூர் நீர்வளத்துறை உதவி பொறியாளராக வந்தேன் என்றால் ஆமாம். இந்த வழக்கில் எதிர் வழக்குரை யார் தாக்கல் செய்தார் என்றால் அப்போது உதவி பொறியாளராக இருந்த ஜோதிபாசு என்பவர் தாக்கல் செய்தார்.

2) பி.வா.சா.ஆ1 ஆவணமானது தாவா சொத்துக்கான வரைபடம் என தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் ஆமாம். பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் முதல் பக்கத்தில் புல எண்.137 என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் ஆமாம். 2வது பக்கத்தில் புல எண்.138 என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் ஆமாம். புல எண்.137, 138 எது வாய்க்கால் என்றால் A க்கும் C க்கும் நடுவில் 257.2 என குறிப்பிடப்பட்டுள்ள பகுதியில் கோடு போட்டு காண்பிக்கப்பட்டும் இடம் தான். புல எண்.136 ஆக காண்பிக்கப்பட்டுள்ள

வரைபடத்தில் கால்வாய் செல்கிறது என்ற எந்த ஒரு குறிப்பும் இல்லை என்றால் உள்ளது.

3) பொதுப்பணி துறையில் கால்வாய் எங்கு எங்கு செல்கிறது என்பது சம்மந்தமாக தனியாக வரைபடம் பராமரிக்கப்பட்டு வருகிறது என்றால் ஆமாம். பொதுப்பணித்துறையில் பராமரிக்கப்பட்டு வரும் வரைபடம் எதுவும் புல எண்.136, 137, 138 சம்மந்தமாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். தாவா சொத்து எந்த ஒரு கால்வாய் செல்லவில்லை என்றாலும் அதனால்தான் பொதுப்பணித்துறையில் எந்த ஆவணமும் பராமரிக்கப்படவில்லை என்றால் சரியல்ல. உண்மையில் புல எண்.136, 137, 138 வழியாக கால்வாய் அதன் வழியாக சென்றிருந்தால் அது சம்மந்தமாக நாங்கள் பராமரிக்கும் ஆவணத்தை தாக்கல் செய்திருப்பேன் என்றால் சரியல்ல.

4) வாதி 13.10.2012 ம் தேதி பொதுப்பணித்துறைக்கு தாவா சொத்தில் கால்வாய் எதுவும் இல்லை என குறிப்பிட்டு வந்து ஆய்வு செய்யும்படி ஒரு மனு கொடுத்திருந்தார் என்றால் ஆமாம். அந்த மனு சம்மந்தமாக என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என தெரிந்துகொண்டேன் என்றால் வருவாய் துறை மூலம் அளவீடு செய்யப்பட்டு ஏற்கனவே உள்ள வாய்க்கால் தோண்டப்பட்டது என்றும் புதிதாக வாய்க்கால் எதுவும் தோண்டப்படவில்லை என்று கடிதம் அனுப்பப்பட்டது.

5) பொதுப்பணித்துறை கால்வாய் எங்கிருந்து வந்து எங்கு வரை செல்கிறது என்பது சம்மந்தமாக வரைபடம் இருக்கும் என்றால் சர்வே எண் வாரியாக இருக்காது கால்வாய் சம்மந்தமாக இருக்கும். கால்வாய் எப்போது தூர்வாறப்பட்து என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் 2010-2011 ஆண்டு தூறுவாறப்பட்டது. அதற்கு முன்பு கால்வாய் தூறுவாரப்பட்டதாக

கோப்புகளில் இல்லை. 2010–2011 ஆம் ஆண்டு தூர்வாறப்பட்டப்போது எவ்வளவு இடம் தூருவாறப்பட்டது எங்கு இருந்து எங்கு தூருவாறப்பட்டது அதில் ஆக்கிரமிப்பு ஏதேனும் காணப்பட்டதா, ஆக்கிரமிப்பை அகற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டதா என்ற குறிப்புகள் அலுவலகத்தில் பராமரிக்கப்படும் என்றால் ஆமாம்.

6) தாவா சொத்தை தூர்வாறுவதற்கு எங்களுக்கு யார் உத்தரவு பிறப்பித்தார் என்றால் வரிச்சூர் கிராம மக்கள் பாசனத்திற்கு கால்வாயில் இருந்து தண்ணீர் விட மறுக்கிறார்கள் என்றும் மதுரை மாவட்ட ஆட்சியிரிடம் மனு கொடுத்து அந்த வரைப்பட்டதின் பேரில் வட்டாட்சியருக்கு கடிதம் எழுதி ஆக்கிரமிப்பை அகற்ற கேட்டுக் கொண்டு கால்வாய் தூருவாறப்பட்டது. பி.வா.சா.ஆ.2 மனுவானது மாவட்ட ஆட்சியரிடம் கொடுத்ததாகவோ, மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடவடிக்கை எடுக்க எங்கள் அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டதாகவோ எவ்வித குறிப்பும் இல்லை என்றால் இல்லை. விவசாய குறைதீர் நாளில் விவாதிக்கப்பட்டுள்ளது. நான் சொல்வதுபோல் விவசாய குறைதீர் நாளில் விவாதிக்கப்படவில்லை என்றாலும் வழக்கிற்காக பொய்யாக சொல்லுகிறேன் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.2 ஆவணத்தில் யார் வாய்க்காலை அடைத்து வைத்திருக்கிறார் என்று குறிப்பாக எதுவும் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. நிலத்தின் உரிமையாளர்கள் யார் என்பதும் பி.வா.சா.ஆ.2 தெளிவாக குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். அதேபோல் சர்வே எண்களும் பி.வ.சா.ஆ.2 ஆவணத்தில் தெளிவாக குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான்.

7) பி.வா.சா.ஆ.2 ஆவணத்தில் 30.11.2011 என தேதி குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் ஆமாம். கால்வாயை தூர்வாறியது 2010–

2011 என கூறும் பட்சத்தில் அந்த கால கட்டத்தில்தான் மனு கொடுக்கப்பட்டிருக்கும் என்றாலும் ஆனால் பி.வா.சா.ஆ.2 ஆவணத்தில் 2009 என குறிப்பிடப்பட்டுள்ளது என்றாலும் இது வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல. பி.வா.சா.ஆ.2 ஆவணமானது விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டத்தில் கொடுக்கப்பட்ட மனு என்றால் ஆமாம். பி.வா.சா.ஆ.3 ஆவணத்தில் பொருள் என குறிப்பிடப்பட்டுள்ள பகுதியில் ஆக்கிரமிப்பு எடுப்பது சம்மந்தமாக என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் ஆமாம். அதன்படி ஆக்கிரமிப்பு அகற்றப்பட்டுவிட்டதாக எதுவும் துலங்கவில்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.3 ஆவணத்தில் 20.08.2010 மாவட்ட ஆட்சியர் தலைமையில் நடைபெற்ற விவசாயிகள் குறைதீரக்கும் கூட்டத்தில் இந்த பிரச்சனை குறித்து பேசப்பட்டது என தெரிவிக்கப்பட்டுள்ளது என்றால் ஆமாம். எனவே பி.வா.சா.ஆ.2 ஆவணமானது இந்த வழக்கிற்காக பொய்யாக உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

8) பொதுவாக பொதுப்பணித்துறைக்கு கட்டுப்பட்ட இடத்திலோ கால்வாயிலோ ஆக்கிரமிப்பு செய்து கட்டிடம் கட்டப்பட்டாலோ அல்லது நிலத்தின் அமைவு மாற்றப்பட்டாலோ அவர்களுக்கு பொதுவாக அறிவிப்பு கொடுத்து பணியை தொடர்வதுதான் சட்டப்படியான நடைமுறை என்றால் வாய்க்கால் தூர்ந்து போனது என்றால் அதை தோண்டிவிடுவோம். கட்டிடம் ஏதேனும் கட்டப்பட்டியிருந்தால் அறிவிப்பு வழங்குவோம்.

9) எதிர்வழக்குரை பத்தி 5ல் வாதியானவர் மேற்படி விவசாய நிலங்களை வீட்டின் மனைகளாக மாற்றி விற்று கொண்டிருப்பதால் இந்த பகுதியில் வாய்க்காலை மறித்து தாவா செய்து வருகின்றார் என்று குறிப்பிடப்பட்டிருந்தது என்றால் ஆமாம். அவ்வாறு எனில் இந்த

வழக்கில் வாதிக்கு அறிவிப்பு அனுப்பிதான் நடவடிக்கை எடுத்திருக்க வேண்டுமென்றாலும் ஆனால் நான் உயர் அதிகாரிகளின் வேண்டுகோளுக்கிணங்க பொய்யான ஆவணம் தாக்கல் செய்து பொய்யான சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

10) எனது தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எந்த ஆவணமும் கால்வாயானது தாவா சொத்தில் வழியாக செல்கிறது என்று நிரூபிக்கும் வகையில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தான பட்டா இடத்தின் வழியாகத்தான் கால்வாய் செல்வதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் ஆமாம். பி.வா.சா.ஆ.4 ஆவணமானது கிராம அடங்கல் ஆகும். அ பதிவேடை பார்வையிட்டால்தான் தாவா சொத்து வழியாக கால்வாய் செல்கிறது ஊர்ஜிதபடுத்தமுடியும் என்றால் அ பதிவேடு வேறு, அடங்கல் வேறு. பி.வா.சா.ஆ.5 ஆவணத்தில் வட்டாட்சியர் கடித எண் மூலம் மேல் நடவடிக்கைக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆக்கிரமிப்பு அகற்றப்பட வேண்டுமென்றால் பொதுப்பணிதுறை அதிகாரிகள் மற்றும் வட்டாட்சியர் இணைந்து தான் அகற்றுவார்கள் என்றால் ஆமாம். உண்மையில் அவ்வாறு நடவடிக்கை எடுத்திருந்தால் வட்டாட்சியர் கடிதம் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் என்றால் சரியல்ல. பின்னிட்டு கோப்புகள் தயாரிக்கும் நோக்கத்தில் பி.வா.சா.ஆ.5 ஆவணத்தில் வட்டாட்சியர் கடிதம் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

11) வாதிக்கு எதிராக அரசியல் பின்புலத்தில் காரணமாக பொய்யான ஆவணங்கள் உற்பத்தி செய்யப்பட்டு என்றால் சரியல்ல. இந்த வழக்கில் எதிர்வழக்குரை பொய்யான காரணங்கள் குறிப்பிட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. தாவா சொத்தில் எந்த ஒரு

**கால்வாயும் செல்லவில்லை என்றாலும் வழக்கிற்காக கால்வாய் செல்கிறது பொய்யாக சொல்லுகிறோம் என்றாலும் சரியல்ல. வாதி கோரிய பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.**

**<u>மறுவிசாரணை:</u>** இல்லை

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேலூர்.